**தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),
**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590


**ஆணை நாள் 10.07.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் SA 477/விசாரணை/E/2024**

| | | |
|---|---|---|
| திரு ரேயாஸ் | .. | மேல்முறையீட்டாளர் |
| */எதிர்/* | | |
| பொதுத் தகவல் அலுவலர்,<br>கண்காணிப்பாளர்,<br>நிலச் சீர்திருத்தத் துறை ஆணையரகம்,<br>எழிலகம், சேப்பாக்கம்,<br>சென்னை - 600 005 | .. | பொது அதிகார அமைப்பு |

******

**ஆணை**

1) இவ்வாணையத்தின் 11.06.2026 நாளிட்ட உத்தரவை தொடர்ந்து. நிலச் சீர்திருத்தத் துறை ஆணையரக கண்காணிப்பாளர் திரு ஆர்.செல்வம் இவ்வாணையத்தில் 10.07.2026 அன்று ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுபடி, மனுதாரருக்கு 08.07.2026 அன்று களஆய்வு செய்வதற்கு அனுமதியளிக்கும் அழைப்பாணை 01.07.2026 அன்று அனுப்பப்பட்டதாகவும், ஆனால் அன்றைய தினம் களஆய்வு செய்வதற்கு மனுதாரர் பொது அதிகார அமைப்பில் ஆஜராகவில்லை என்றும் தெரிவித்தார்.

2) இதற்கிடையில், மனுதாரர் 08.07.2026 நாளிட்டு ஆணையத்திற்கு அனுப்பியுள்ள மின்னஞ்சலில் தனக்கு 08.07.2026 அன்று களஆய்வு செய்வதற்கு அழைப்பாணை அனுப்பப்பட்டதாகவும், ஆனால் தான் வெளியூர் சென்றிருப்பதால், அன்றைய தினம் களஆய்வு செய்வற்கு தன்னால் இயலாது என்றும், ஆகவே, களஆய்வு செய்வதற்கு ஆகஸ்ட் மாதம் மத்தியில், ஒரு தேதியை தனக்கு தர வேண்டுமென்றும், இரண்டு வாரங்கள் முன்னதாகவே தனக்கு அத்தேதியை தெரிவிக்க வேண்டுமென்றும் கோரியுள்ளார்.

3) வழங்கப்பட்ட ஆவணங்களை பரிசீலித்த ஆணையம், மனுதாரரின் கோரிக்கையை ஏற்று, அவருக்கு களஆய்வு செய்வதற்கு 19.08.2026 அன்று அனுமதியளிக்க வேண்டுமென்றும், மனுதாரர் கள ஆய்வு செய்த விவரம் குறித்த அறிக்கையை இவ்வாணையத்தில் **25.08.2026** அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்றும் இன்று ஆஜரான பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஓம்/- (அபய் குமார் சிங்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண் SA 477/விசாரணை/E/2024</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
கண்காணிப்பாளர்,
நிலச் சீர்திருத்தத் துறை ஆணையரகம்,
எழிலகம், சேப்பாக்கம்,
சென்னை - 600 005

திரு ரேயாஸ்,
எண்.15/255-ஏ, 4வது குறுக்கு,
எஸ்.எஸ்.நகர் விரிவாக்கம்,
பார்வதிபுரம்,
நாகர்கோவில் -629 003
கன்னியாகுமரி மாவட்டம்

Copy to File
CR/PA